# 100 நாள் வேலைத்திட்டத்தின் 23.04.2015ல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கை

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 01 | அரசாங்க ஊழியர்களுக்கு ரூபா 10,000/- சம்பள உயர்வு வழங்கி அதன் முதற்படியாக உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பெப்ரவரி மாத சம்பளத்தை ரூபா 5,000/- உயர்த்துதல். | நிதி அமைச்சு | பொது நிர்வாக அமைச்சு | முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையை வெளியிடுதல் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 01அ | அரச துறையின் அனைத்து நிலுவைகள் உள்ளடங்களாக ஒன்றிணைந்த சம்பள கொடுப்பனவு திட்டத்தை உருவாக்குதல். | நிதி அமைச்சு, தேசிய கொடுப்பனவுகள் ஆணைக்குழு | பொது நிர்வாக அமைச்சு | தேசிய கொடுப்பனவுகள் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தல் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | தேசிய கொடுப்பனவுகள் ஆணைக்குழுவினால் இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 02 | அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கான கடன் தொகை முற்றாக நீக்கப்பட்டு, ஏற்கனவே முற்கொடுப்பனவு செய்தவர்களுக்கு மீளச் செலுத்தப்படும். | நிதி அமைச்சு | | கௌரவ நிதி அமைச்சரின் ஆலோசனைக்கமைய நிதி அமைச்சின் செயலாளரினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | அரசுக்கு ஏற்கனவே சம்பந்தப்பட்ட தொகையை செலுத்திய 30,000 பேருக்கு உடனடியாக மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 03 | அரசியல் வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பட்டதாரிகள், ஒழுங்கு முறையில் சேவை நிறுவனங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு, அவர்களின் கல்வித் தகைமைக்கு ஏற்ப பதவி உயர்வு வழிமுறை ஒன்று ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பொது நிர்வாக அமைச்சு | கொள்கைத் திட்டமிடல் அமைச்சு | அ. தற்பொழுது நடைமுறையிலிருக்கின்ற சேவை பிரமாணக் குறிப்பினை மீள்பரிசீலனை செய்து பதவி உயர்வுக்கான திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்<br><br>ஆ. செயற்றிறன் மிக்க வகையில் சேவைகளை மீள அமர்த்திக் கொள்வதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்தல் | (அ) பதவி உயர்வு திட்டம் தயாரிக்கப்பட்டு சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்படுகினறது.<br><br>(ஆ) விஷேட ஆளணி அடையாளங் காணப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>(இ) பொது சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக திருத்தங்களிற்கான வரைபுக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 04 | ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை நீக்கும்வரை அவர்களுக்கு 3,500 ரூபா மாதாந்த இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படும். | பொது நிர்வாக அமைச்சு, ஓய்வூதிய திணைக்களம் | நிதி அமைச்சு | இது சம்பந்தமாக சுற்றறிக்கையை வெளியிடுதல் வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 05 | அரச வங்கிகளில் பேணப்படும் சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கு முதல் பத்து இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும் வட்டி 15% வரை உயர்த்தப்படும். | கொள்கை திட்டமிடல் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி | | இலங்கை மத்திய வங்கியால் சுற்றறிக்கை வெளியிடப்படல் வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 06 | தற்போது வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவை ஆகக் கூடியது 200% ஆல் அதிகரித்தல் | வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, | நிதி அமைச்சு | வரவு செலவு திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கமைய நடவடிக்கை எடுக்கபட வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 07 | பிள்ளையைப் பிரசவிக்கும் அனைத்து தாய்மாருக்கும் போசாக்கு உள்ள உணவுகளைப் கொள்வனவு செய்வதற்காக ரூபா.20,000 கொடுப்பனவாக வழங்குதல். | சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சு | நிதி அமைச்சு, சுகாதார அமைச்சு | குறைந்த நிறையுடைய பிறப்புக்களை தவிர்த்துக்கொள்வதற்காக கர்ப்பகாலத்தில் போசாக்குடைய உணவை பெற்றுக்கொடுப்பதற்கான முறையொன்றை அறிமுகப்படுத்தல் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 08 | அத்தியாவசிய பத்து வகையான உணவுப் பொருட்களுக்கு வரி விலக்கு அளித்து அவற்றின் விலையைக் குறைத்தல். அத்தகைய அத்தியாவசிய உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்கு விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ளல். | நிதி அமைச்சு | | வரவு செலவு திட்ட உரையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 09 | எரிபொருளுக்காக அரசு அறவிடும் 4 ஆயிரம் கோடி இறக்குமதி வரியை நீக்கி எரிபொருளுக்கான விலையை பொதுமக்களுக்கு பலனளிக்குமாறு பெற்றுக்கொடுத்தல். | நிதி அமைச்சு | மின்சக்தி மற்றும் எரிசக்தி | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது | |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 10 | போக்குவரத்துறைக்கு அவசியமான பொருத்தமான ஊக்குவிப்புகளை வழங்குவதுடன் அரசு மற்றும் தனியார்துறை இணைந்த சீரான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தல். | உள்நாட்டு போக்குவரத்து அமைச்சு | நிதி அமைச்சு | குறித்த நிரல் அமைச்சினால் விரிவான திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 11 | வீட்டுப் பாவனைக்காகப் பயன்படுத்தும் வாயு சிலின்டரின் (Gas cylinder) விலையை 300 ரூபாயால் குறைத்தல். | நிதி அமைச்சு | உணவு பாதுகாப்பு அமைச்சு | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. | |
| 12 | நெல் கொள்வனவு செய்யும் போது கிலோ ஒன்றின் உத்தரவாத விலையை 50 ரூபாவாக அதிகரித்தல். | நிதி அமைச்சு | உணவு பாதுகாப்பு அமைச்சு | திறைசேரி இது தொடர்பான 05.02.2015 ம் திகதி 7ம் உருப்படி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 13 | ஒரு கிலோகிராம் கிழங்குக்கான உத்தரவாத விலையை 80 ரூபாவாக அதிகரித்தல். | நிதி அமைச்சு | உணவு பாதுகாப்பு அமைச்சு | உரிய நிரல் அமைச்சுக்களுடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்று திறைசேரியினால் தயாரிக்கப்படல் வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 14 | ஒரு கிலோ தேயிலை கொழுந்துக்கான அதிகபட்ச கொள்வனவு விலையாக ரூபா 80 மற்றும் 90 ரூபாவிற்கு இடையில் ஏற்படுத்துதல். | நிதி அமைச்சு | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | உரிய நிரல் அமைச்சுக்களுடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்று திறைசேரியினால் தயாரிக்கப்படல் வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 15 | ஒரு கிலோ இறப்பருக்கான உத்தரவாத விலையை ரூபா 350 ஆக்குதல் | நிதி அமைச்சு | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | உரிய நிரல் அமைச்சுக்களுடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்று திறைசேரியினால் தயாரிக்கப்படல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 16 | பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லீட்டர் பாலுக்கு தற்போது பெறும் 60 ரூபாய் உத்தரவாத விலையை 10 ரூபாயால் அதிகரித்தல். | நிதி அமைச்சு | சமூக சேவைகள், நலன்புரி மற்றும், கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு | உரிய நிரல் அமைச்சுக்களுடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்று திறைசேரியினால் தயாரிக்கப்படல் வேண்டும். | கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான முன்மொழிவுகள் கால்நடை அபிவிருத்தி அமைச்சால் திறைசேரிக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்படுகின்றது. எனினும், பால் உற்பத்தியில் ஈடுபடும் தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் ஜுன் மாதத்திலிருந்து இப்பிரேரணையை அமுல்படுத்துவதற்கு இணக்கங்காணப்பட்டுள்ளது. |
| 17 | சகல விவசாய கடன்பட்டவர்களின் கடனிலிருந்து 50 வீதம் விலக்களித்து மிகுதியை செலுத்துவதற்கு கால அவகாசம் அளித்தல். | கொள்கை திட்டமிடல் அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி | நிதி அமைச்சு/ நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சு | நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்து இலங்கை மத்திய வங்கியினால் உரிய சுற்றறிக்கையானது வெளியிடப்பட வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 18 | தற்போது வழங்கப்படும் உயிருக்கும் மண்ணுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய தரம் குறைந்த உரங்களுக்கு பதிலாக சிறந்த தரத்தை உடைய உர வகைகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் உற்பத்திகளின் தரத்தை பேணுதல் | நீர்பாசன மற்றும் விவசாய அமைச்சு, தேசிய உரச் செயலகம் | நிதி அமைச்சு | இத்துறைசார் நிபுணர்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் துணையுடன்<br>I. தரமான உரங்கள் மற்றும் இரசாயனபொருட்களுக்கான தரங்கள்/நியமங்களை உருவாக்குதல்<br>II. தடை செய்ய வேண்டிய தீங்கு விளைவிக்கக் | அ.இது தொடர்பான நிபுணத்துவ குழுவின் ஆலோசனைக்கமைய புதிய நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.<br>ஆ. உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டுகளிலிருந்தும் உரங்களை கொள்வனவு செய்யும் போது தரத்தை |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| | | | | கூடிய இரசாயன பதார்த்தங்களை இணங்காணுதல் | உறுதி செய்வதற்காக அதிகளவு மாதிரிகள் பரிசீலனை செய்யப்படுகின்றன. |
| 19 | தற்போது சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் தரம் குறைந்த பசளைக்கு பதிலாக தரம் கூடிய பசளையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | நிதி அமைச்சு | இத்துறைசார் நிபுணர்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் துணையுடன<br>அ. தரமான உர வகைகள் மற்றும் இரசாயன பதார்த்தங்களுக்கான நியமங்கள்/ தரங்களை உருவாக்குதல்<br>ஆ. தடைசெய்யவேண்டிய தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயன பொருட்களை இணங்காணுதல் | (அ) காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக 520 மாதிரிகள் பரீட்ச்சிக்கப்பட்டுள்ளன.<br>(ஆ) விஞ்ஞான ரீதியில் தரமான உர வகைகளின் பிரயோகம் தொடர்பாக தேயிலை பயிர்ச்செய்கையாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழிச்சித்திட்டங்கள் 6 மாவட்டங்களிலும் ஊவா மாகாணத்திலும் நடாத்தப்பட்டுள்ளன. |
| 20 | நடுக்கடலில் உயிரிழக்கும் மீனவர்களுக்காக அரச அங்கீகாரத்துடன் 10 இலட்சம் ரூபாய் காப்புறுதி இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சு | நிதி அமைச்சு, பொது ஒழுங்குகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அறிக்கையொன்றை பெற்றுத்தருமாறு காப்புறுதி கூட்டுத்தாபன தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட வேண்டும் | முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>இக்காப்புறுதி திட்டத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினூடாக அமுல்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 21 | விவசாயிகளுக்கு விவசாய பாதிப்பு ஏற்படும் போது அரச அங்கீகாரத்துடனான விவசாய காப்புறுதி திட்டம் ஒன்றை அமுலாக்குதல். | நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சு | நிதி அமைச்சு | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அறிக்கையொன்றை பெற்றுத்தருமாறு காப்புறுதி கூட்டுத்தாபன தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட வேண்டும் | முன்மொழியப்பட்ட புதிய காப்புறுதி திட்டம் நிதி அமைச்சின் அவதானங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 22 | மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்குமான புதிய ஓய்வூதிய திட்டத்தை ஆரம்பித்தல். | நிதி அமைச்சு, நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சு கடற்றொழில் இராஜாங்க அமைச்சு | | சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், நடைமுறையிலிருக்கின்ற ஓய்வூதிய முறைமையை கவனத்தில் கொண்டு இணைந்த திட்டமொன்றை சமர்பித்தல். | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி வரைபு மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 23 | முச்சக்கர வண்டி சாரதிகள், கட்டட தொழிலாளர்கள், தச்சு தொழிலாளர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள், முறைசார தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதிய திட்டமொன்றை ஆரம்பித்தல். | நிதி அமைச்சு, கைத்தொழில் வாணிப அமைச்சு | | சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், நடைமுறையிலிருக்கின்ற ஓய்வூதிய முறைமையை கவனத்தில் கொண்டு இணைந்த திட்டமொன்றை சமர்பித்தல் வேண்டும். | இலங்கை சமூக பாதுகாப்பு காப்புறுதி சபை சுயதொழில் முயற்சியாளர் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை மீளாய்வு செய்வதுடன் அவர்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொள்கின்றது. |
| 24 | வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கான ஓய்வூதியச் சம்பளத் திட்டம் ஒன்று ஆரம்பித்தல். | நிதி அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சு | | நடைமுறையிலிருக்கின்ற ஓய்வூதிய முறைமையை கவனத்தில் கொண்டு ஒருங்கிணைந்த திட்டமொன்றை சமர்பித்தல் வேண்டும். | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விஷேட குழுவினால் பொருத்தமான ஓய்வூதிய திட்டத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 24அ | வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கான உள்நாட்டில் வதியாதோர் அந்நிய செலாவணி வங்கி வைப்புக்களுக்கு தற்போது வழங்கப்படும் வட்டியை 2.5% ஆல் அதிகரித்தல். | நிதி அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சு | கொள்கை திட்டமிடல் அமைச்சு, (இலங்கை மத்திய வங்கி) | பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக செயற்குழு ஒன்றை நியமித்து அதற்கமைய முன்மொழிவு திட்டம் ஒன்றை தயாரித்தல் வேண்டும். | வர்த்தக வங்கிகள் உள்நாட்டில் வதியாதோர் அந்நிய செலாவணி வங்கி வைப்புக்களுக்கு உயர் வட்டியை வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 25 | மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளில் தமது உழைப்பை அர்ப்பணிக்கும் இலங்கையர்களின் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு, விசேட குடும்பப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல் | வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சு இரா.அ/சிறுவர் விவகார அமைச்சு | மகளீர் விவகார அமைச்சு | தற்போது நடைமுறையிலிருக்கின்ற குடும்ப பாதுகாப்பு வேலைத்திட்டத்தை கவனத்திற் கொண்டு அமைச்சினால் இணைந்த திட்டமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். | இணைந்த நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை அமைச்சர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் தீர்மானத்திற்கமைய சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. |
| 26 | அரச வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட 200,000 ரூபாவினை விஞ்சாத பெறுமதியுடைய ஆபரணங்களுக்கான வட்டியையும், தண்டப்பணத்தையும் நீக்குதல். | நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு, இலங்கை மத்திய வங்கி | | நிதி அமைச்சுடன் கலந்துரையாடி இலங்கை மத்திய வங்கியினால் உரிய அறிவுறுத்தல் வெளியிடப்பட வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 27 | நிதிக் கம்பனிகள், கடன் அட்டை திட்டங்கள் மற்றும் பிரமிட் திட்டங்களின் பல்வேறு உறுதிமொழிகளின் மூலம் கடன் சுமைக்கு உள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | இலங்கை மத்திய வங்கி,<br>நிதி அமைச்சு | | நிதி அமைச்சுடன் கலந்துரையாடி இலங்கை மத்திய வங்கியினால் உரிய அறிவுறுத்தல் வெளியிடப்பட வேண்டும். | (அ) வைப்புக்களை கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட கோல்டன் கீ கடன் அட்டை கம்பனி (GKCC) மற்றும் வரையறுக்கப்பட்ட மத்திய முதலீட்டு நிதிக் கம்பனி உள்ளடங்களான நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளன.<br>(ஆ) அத்தகைய வைப்புக்களை செய்தோருக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 28 | சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம்,பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை போன்றவற்றிலிருந்து பெண்களையும், சிறுவர்களையும் பாதுகாத்து சுதந்திரமாக வாழ்வதற்கான விஷேட சட்ட மூலத்தை உருவாக்கல், அதை கடுமையாக அமுலாக்கல். | நீதி அமைச்சு,<br>மகளீர் விவகார அமைச்சு,<br>இரா/அ சிறுவர் விவகாரம் | | ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள சிறுவர் நீதித்துறை பாதுகாப்பு வரைபு ஆய்வு செய்யப்படல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 29 | போரின் காரணமாக விதவைகளான அனைத்து தரப்பினரைச் சார்ந்த பெண்களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் விசேட பாதுகாப்பு பராமரிப்பு திட்டத்தை அமுலாக்குதல். | மகளீர் விவகார அமைச்சு | சமூக சேவைகள், நலன்புரி மற்றும், கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு | தற்போது நடைமுறையிலிருக்கும் நிகழ்சித்திட்டத்தை மீளாய்வு செய்து பொருத்தமான முன்மொழிவொன்று அமைச்சினால் சமர்பிக்கப்படல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 30 | அரசியல் செயற்பாடுகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்வதற்கான சட்டமூலத்தை அறிமுகஞ் செய்வதன் மூலம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி முறைமைகளில் 25% மான பெண்களின் பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்தல். | மகளீர் விவகார அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு | | தேர்தல் ஆணையாளர் உட்பட்ட பொருத்தமான தரப்பினர்களுடன் கலந்தாலோசித்து மசோதா ஒன்றை வரைவதற்காக அமைச்சினால் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுக்கப்படல் வேண்டும். | அரசியல் செயற்பாடுகளில் பெண்களின் பங்குபற்றலை ஊக்குவிப்பதற்கான தொடர்பாடல் தந்திரோபாயம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 31 | இளைஞர் பரம்பரை அதிருப்தி கொண்டிருப்பதற்கு முக்கிய காரணியான தொழில்வாய்பின்மையை நீக்குவதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மற்றும் சுயதொழில்களிற்காக 10 இலட்சம் தொழில்வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குதல். | கொள்கை திட்டமிடல் அமைச்சு, நிதி அமைச்சு | வெளிநாட்டு வேலைவாய்ப் புகள் அமைச்சு, கைத்தொழில் வாணிப அமைச்சு, பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | சம்பந்தபட்ட அனைத்து தரப்பினர்களுடன் கலந்தாலோசித்து ஏப்ரல் மாத முதல் வாரத்திற்குள் பொருத்தமான முன்மொழிவுகள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். | அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| 32 | இளைஞர் யுவதிகள் தாங்கள் விரும்பும் விடயங்களை பகிரங்கமாக பேசுவதற்கும் பிரகடனப்படுத்துவதற்கும் சுதந்திரமான இளமை வாழ்க்கையை அனுபவிப்பதற்கான உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்தல். | இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சு, கொள்கைத் திட்டமிடல் அமைச்சு | | இளைஞர் சாசனமொன்றை இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சு உருவாக்குதல் வேண்டும். தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிகழ்ச்சிகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் இளம் உறுப்பினர்களின்(1/3 பெண்கள்) பங்குபற்றுதலை உறுதிப்படுத்துதல் வேண்டும். | முதலாவது இளைஞர் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி மேலும் மேம்படுத்தல்களுடன் ஆகஸ்ட் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 33 | இலவசமாக இணையதளங்களை வழங்குவதற்கு சகல நகரங்களிலும் பிரசித்தமான இடங்களில் WiFi வலயங்களை ஏற்படுத்துதல் | கொள்கைத் திட்டமிடல் அமைச்சு, வெளிவிவகார அமைச்சு (ICTA) | இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சு | இலவசமாக இணையத்தள வசதிகளை பெற்றுத்தருவதற்காக அனைத்து நகரங்களினதும் பிரசித்திப்பெற்ற இடங்களில் WiFi வலயங்களை உருவாக்குவதற்கான செயற்றிட்டத்தை தயாரித்து சமர்பித்தல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 34 | இளைஞர் பாராளுமன்றத்திற்கு நிதி வளத்தை பெற்றுக் கொடுத்து, இளைஞர் சபை மற்றும் ஏனைய இளைஞர் அமைப்புக்களிலிருந்து கோரப்படும் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்காக 2015 ஆண்டிற்கு 250 ரூபா மில்லியன் இளைஞர் பாராளுமன்றத்திற்கு ஒதுக்கீடு செய்தல். | நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு | இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சு | குறித்த நிரல் அமைச்சுக்களினால் பொருத்தமான செயற்றிட்டங்கள் இணங்காணப்படல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 35 | கடன் தகவல் மையத்தினால் (CRIB) அட்டவணைப்படுத்தப்பட்டு கடன் திட்டத்தில் பயன் பெற முடியாதவாறு அல்லலுறும் சிறு மற்றும் மத்திய வியாபார உரிமையாளர்களை அதிலிருந்து விடுவித்து சாதாரண ஒப்பந்தத்தின் மூலம் கடன் வழங்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத்தல். | நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, (இலங்கை மத்திய வங்கி) | கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு | நிதி அமைச்சு மற்றும் ஏனைய முகவர்களின் ஆலோசனையுடன் இலங்கை மத்திய வங்கி வழிகாட்டல்களை வெளியிடுதல் வேண்டும். | (அ) பிரேரிக்கப்பட்ட திட்டம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.<br>(ஆ) வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு அரச வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 36 | நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டும் கெசினோ, போதைப்பொருட்கள், எதனோல் வியாபாரத்திறகு மாற்றீடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக செயல்படும் சமூகத்தை உருவாக்கி சிறிய மற்றும் மத்திய தொழில் திட்டங்களுக்கு விலக்களிக்கப்பட்ட நிபந்தனையற்ற கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தல். | கொள்கை திட்டமிடல் அமைச்சு, (இலங்கை மத்திய வங்கி), நிதி அமைச்சு | கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு | தற்போது நடைமுறையிலுள்ள முன்னேற்றங்களை ஆய்வு செய்து கொள்கை திட்டமிடல் அமைச்சினால் பொருத்தமான முன்மொழிவொன்று சமர்பிக்கப்படல் வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 37 | ஏற்றுமதிதுறையை ஊக்குவித்து தொழில் வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் GSP+ இன் நிவாரணத்ததைப் மீண்டும் பெற்றுக்கொடுத்தல். | கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு, வெளிவிவகார அமைச்சு | கொள்கை திட்டமிடல் அமைச்சு | உரிய அமைச்சினால் இது தொடர்பாக பொருத்தமான ஒருங்கிணைந்த உபாய திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவினால் தரவுகள் ஆய்வு செய்யப்படுகின்றன. |
| 38 | தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிதி நிறுவனம் மற்றும் வங்கி இணைப்புச் செயற்பாட்டை மறுபரிசீலனை செய்தல். | நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, (இலங்கை மத்திய வங்கி) | | அமைச்சு உரிய தரப்பினருடன் கலந்தாலோசித்து மீளாய்வு செய்ய வேண்டும் | ஒருங்கிணைந்த மீளாய்வு குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைபு அறிக்கை மத்திய வங்கியின் அவதானங்கள்/ கருத்துக்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 39 | விஷேட கடன் திட்டத்தை நிர்வகிக்கவும், அபிவிருத்தி செய்யவும் சுயாதீன அதிகார சபை ஒன்றை உருவாக்குதல். | கொள்கை திட்டமிடல் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி | நிதி அமைச்சு | அமைச்சானது இலங்கை நுண்நிதி பயிற்சியாளர்கள் சங்கத்தினால் முன்மொழியப்பட்ட வரைவு பற்றிய கருத்துக்களை பொது மக்களிடமிருந்தும் மற்றும் உரிய அரச முகவர்களினதும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 40 | சிறு தொழில் முயற்சியாளர்களை பாதுகாப்பதற்காக பணியகம் ஒன்றை ஸ்தாபித்தல். | கொள்கை திட்டமிடல் அமைச்சு, (இலங்கை மத்திய வங்கி) கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு | | அமைச்சானது இந்த துறைக்காக தற்போது காணப்படும் அரச நிறுவனங்களை இணங்கண்டு, அவற்றின் செயற்பாடுகளை ஆய்வு செய்து எதிர்கால செயற்பாடுகளை முன்மொழிதல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 41 | முச்சக்கர வண்டி ஓட்டுனர்களின் வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் மற்றும் வங்கித்துறையினர் உள்ளடங்கலான ஒரு அரசாங்க காரியாலயத்தை தோற்றுவித்தல். | உள்ளக போக்குவரத்து அமைச்சு | நிதி அமைச்சு | காப்புறுதி கம்பனிகள், போக்குவரத்து திணைக்களம் மற்றும் முச்சக்கர வண்டியாளர்கள் சங்கம் என்பவற்றின் ஆலோசனையுடன் திட்டமொன்றை அமைச்சு சமர்பிக்க வேண்டும். | குழு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சட்ட வரைஞர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு தயாராகவுள்ளது. |
| 42 | இலவச சுகாதார சேவைக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 1.8% சதவீத நிதியை 3% சதவீதம் வரை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு, நிதி அமைச்சு | கொள்கை திட்டமிடல் அமைச்சு | சுகாதார துறையை அபிவிருத்தி செய்வதற்காக வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துக்கொள்வதை பிரதான அடிப்படையாக கொண்ட தந்திரோபாய திட்டமொன்று அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 43 | அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் அனைத்து நோயாளர்களுக்கும் தேவையான மருந்துகள் பற்றாக்குறையின்றி அவ்வைத்தியசாலைகளில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தல். | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு | நிதி அமைச்சு | உரிய தொழிற் சங்கங்கள் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையுடன் தற்போது காணப்படுகின்ற கொள்வனவு மற்றும் விநியோக செயல்முறைகள் அமைச்சினால் சீராக்கப்படல் வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 44 | அரச வைத்தியசாலைகளின் சிகிச்சைக்காகக் காத்திருக்கும் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள, நோயாளர்களின் சத்திரசிகிச்சைகளை துரிதமாக நிறைவு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல். | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு | நிதி அமைச்சு, | உரிய தொழிற் சங்கங்கள் மற்றும ஆர்வமுடைய பங்குதாரர்களுடன் கலந்துரையாடி அமைச்சினால் பொருத்தமான நிகழ்சசித்திட்டத்தை தயாரிக்க வேண்டும். | அரச வைத்தியசாலைகளில் அறுவைச்சிகிச்சை மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்காக காத்திருக்கும் பட்டியலை குறைப்பதற்காக மாற்று தீர்வை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 45 | அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவை இரவு பத்து மணிவரை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு | நிதி அமைச்சு | இது தொடர்பாக அமைச்சினால் பொருத்தமான படிமுறைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 46 | சிறுநீரக நோய்களுக்குக் காரணமான களை நாசினி மற்றும் இரசாயனப் பீடைக்கொல்லிகளின் இறக்குமதியை தற்காலிகமாக தடைசெய்து, சிறுநீரக நோய் பாதிப்பிலிருந்து பொது மக்களை பாதுகாப்பதற்கான குறுங்கால மற்றும் நீண்டகால திட்டங்களை தயாரித்தலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதை உத்தரவாதப்படுத்தலும். | நீர்பாசன மற்றும் விவசாய அமைச்சு | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு | ஆராய்சியாளர்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் உதவியுடன்<br>I. தரமான உர வகைகள் மற்றும் இரசாயன பதார்த்தங்களுக்கான நியமங்கள்/ தரங்களை உருவாக்குதல்<br>II. தடைசெய்யவேண்டிய தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயன பொருட்களை இணங்காணுதல் | உலக சுகாதார அமைப்பின் அறிக்கைக்கு அமைய சந்தேகப்படும்படியான கிருமி நாசினிகள் 04 ல் 03இன் (காபபியூரான், க்ளோரோஸ் மற்றும் புரப்பனில்) இறக்குமதி முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. மிகுதி கிருமி நாசினியான "க்ளப்போசேட்" காக பதிலீடு ஒன்று இல்லாததனால் சிறுநீரக நோய் அதிகமாக உள்ள 05 மாவட்டங்களில் அதனை விற்றல் மற்றும் பாவித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.<br>மேலும் அவ்விவசாய இரசாயன இறக்குமதியை குறிப்பிட்ட மட்டத்திற்கு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 47 | உணவு, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் சேவைகள், ஔடதங்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய நுகர்வுப் பண்டங்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு வினைத்திறனான நிறுவனத்தை ஸ்தாபித்தல். | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு | உணவு பாதுகாப்பு அமைச்சு, (நுகர்வோர் விவகார அதிகார சபை) | I. உச்ச நீதிமன்றத்தின் தீர்மானமான "தேசிய ஔடதங்கள் ஒழுங்குமுறை ஆணைய மசோதா" வை அமுல்படுத்துதல்.<br>II. சுகாதார அமைச்சில் வலுவான உணவு கட்டுப்பாட்டு நிர்வாக அலகொன்றை ஏற்படுத்தல். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 48 | ஆயுர்வேத சமூக வைத்திய சுகாதார சேவையை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு | | உரிய அமைச்சினால் விரிவான திட்டமொன்று சமர்ப்பிக்க வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 49 | சகல மேலைத்தேய, கீழைத்தேய உள்நாட்டு வைத்திய முறைகளை சிறப்பாக கூட்டிணைத்து ஒன்றிணைந்த சேவையை மக்களுக்கு வழங்க அவசியமான நடவடிக்கை எடுத்தல். | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு | | 1961ஆம் ஆண்டு 31 ம் இலக்க கட்டளைச் சட்டத்தை சீர்திருத்தம் செய்வதற்காக அமைச்சினால் விரிவான திட்டமொன்று சமர்ப்பிக்க வேண்டும் | இந்தியாவில் தற்போது செயற்படுத்தப்படும் மேலைத்தேய, கீழைத்தேய இணைந்த வைத்திய முறைகளை ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 50 | போதைப்பொருள், கேரள கஞ்சா, டெபா போன்ற போதைப்பொருட்களின் பாவனையை முழுமையாக நிறுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி தற்போது இப்பாவனையியால் வாழ்வாதாரத்தை இழந்த இளைஞர் சமூகத்தை புனர்வாழ்வு அளிக்கக் கூடிய தேசிய வேலைத்திட்டம் ஒன்றை வெளிநாட்டு உதவியின் மூலம் | நீதித்துறை அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு | மக்கள் தொடர்பாடல் தகவல் அமைச்சு, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை | I. அமைச்சானது போதை வஸ்துக்களை ஒழிக்க துரிதமாக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதேவேளை பொது மக்களை அறிவுறுத்தும் பிரசாரங்களை ஆரம்பித்தல்.<br>II. அமைச்சானது தற்போது நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வு செய்து போதை | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| | நடைமுறைக்கு கொண்டுவருதல். | | | வஸ்துக்களுக்கு அடிமையாகியோருக்கு புனர்வாழ்வளிப்பதற்கான விரிவான முன்மொழிவொன்றை சமர்ப்பித்தல். | |
| 51 | போதைவஸ்து வியாபாரிகளை ஒடுக்குவதற்கு, ஒன்றிணைக்கப்பட்ட படையணியை உருவாக்கல். | ஜனாதிபதி செயலகம், நீதித்துறை அமைச்சு | பொது ஒழுங்குகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | இது தொடர்பாக பொருத்தமான உறுப்பினர்களை கொண்ட விசேட செயலணியை நியமித்தல் வேண்டும். | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 52 | புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்களை உருவத்தினாலான சுகாதார விளம்பர எச்சரிக்கையை 80% ஆக அதிகரித்தல். | சுகாதார மற்றும் சுதேச ஔடதங்கள் அமைச்சு | | குறித்த அமைச்சினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 53 | மகாநாயக்க தேரர்களின் எதிர்ப்புக்களுக்கு முரணாக, உபாயமார்க்கச் சட்டத்தின்கீழ் பாரியளவிலான வரி நிவாரணங்களை வழங்கும் கசினோ உத்தரவுப் பத்திரங்களை உடனடியாக இரத்துச் செய்தல். | நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, | உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | இம்முன்மொழிவை செயற்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | (அ)தந்திரோபாய அபிவிருத்தி சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கையை ரத்து செய்வதற்கான வரைவு சட்டவரைஞருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஆ) சம்பந்தப்பட்ட சட்டவிதிகள் மற்றும் வழங்கல்களில் மாற்றங்களை முதலீட்டுச் சபை செய்துவருவதுடன் சட்டமா அதிபரின் பதில் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 54 | சுங்கவரி செலுத்தாமல் மேற்கொள்ளப்படும் எத்தனோல் வியாபாரம் ஒடுக்கப்படும். | நிதி அமைச்சு, பொது ஒழுங்குகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | | i. சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் குற்றவளிகளுக்கு எதிராக துரிதமாக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்<br>ii. எதனோல் இறக்குமதி மற்றும் பயன்பாடுகளை கண்காணிக்கும் செயல்முறைகளை வலுப்படுத்துவதற்காக அமைச்சினால் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்தல். | (அ)இலங்கை மது வரித் திணைக்களம் ,இலங்கை சுங்க திணைக்களம் மற்றும் இலங்கை ஏற்றுமதி இறக்குமதி திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் எதனோல் இறக்குமதி தொடர்பாக அனுமதிப்பத்திரத்தை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>(ஆ) சட்டவிரோத எதனோல் இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு முறையான கண்காணிப்பு பொறிமுறையொன்று தயாரிக்கப்படுகின்றது. |
| 55 | இலவச கல்விக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 1.7% சதவீதத்தை 6% சதவீதமாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | மனிதவள அபிவிருத்தி சபை, கொள்கை கற்கை நிறுவகத்தின் உதவியுடன் | கல்வி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு | கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் உதவியுடன் மனித வள அபிவிருத்தி சபை முன்னுரிமை அடிப்படையில் உபாயமார்க்கத் திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும். | தந்திரோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 56 | உயர் கல்வி அமைச்சினால் பறிக்கப்பட்ட பல்கலை கழகத்தின் அதிகாரம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஊடாக மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு வழங்கி அரசியல் மயப்படுத்தலுக்குள்ளான பல்கலைக்கழகங்களை அதிலிருந்து விடுவித்தல். | கொள்கை திட்டமிடல் அமைச்சு, உயர் கல்வி அமைச்சு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | பல்கலைகழகங்களின் சுயாதீனத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் நீதி முறைகளை நீக்குவதற்காக ஒன்றிணைந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் உரிய தரப்பினர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ள வேண்டும். | வழங்கப்பட்ட அதிகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினூடாக மீண்டும் பல்கழைக்கழகங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான சுற்று நிருபம் தயாரிக்கப்படுகின்றது. இது தொடர்பான முன்மொழிவொன்று பல்கலைகழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் விரிவான திட்டமொன்றும் தயாரிக்கப்படுகின்றது. |

| # | முன்மொழிவுகள் | நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புடைய நிறுவனம் | | செயற்குழுவால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்/ குறிப்புகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | பிரதான முகவர் | தொடர்புடைய ஏனைய முகவர் | | |
| 57 | பல்கலைக்கழக மஹபொல மாணவர் உதவித் திட்டம் 5,000 ரூபாய் வரை அதிகரிக்கப்படும். | உயர் கல்வி அமைச்சு, நிதி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, மஹாபொல புலமை பரிசில் நம்பிக்கை நிதியம் | | மஹாபொல புலமை பரிசில் நம்பிக்கை நிதியம் முகங்கொடுக்க வேண்டிய மேலதிக நிதித்தேவையை உயர் கல்வி அமைச்சு இணங்காண வேண்டும் | முன்மொழிவு அமுலாக்கப்பட்டுள்ளது. |
| 58 | க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களை சித்தியெய்தும் அனைவரும், தமது விருப்பத்திற்குரிய வகையில் உயர் டிப்ளோமாவையோ அல்லது பட்டத்தையோ (Degree) பெறக்கூடிய வகையில் கல்வி கற்பதற்கு வசதிகள் செய்யப்படும். | உயர் கல்வி அமைச்சு, இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சு | | அமைச்சானது தேசிய மனித வள அபிவிருத்தி சபையிடமிருந்து விரிவான திட்டமொன்றை பெற்றுக்கொள்ளுதல். | அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது, அமுல்படுத்தப்படவுள்ளது. |
